# கோடிக்கணக்கில் நிதி பெற்றதன் மூலம் ‘உண்மையான ஊழல் கட்சி பா.ஜ.க.’ என்பது உறுதியாகி விட்டது!

## ‘DT Next’ - ஆங்கில இதழுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புப் பேட்டி... முதல் பக்கத் தொடர்ச்சி

**அறிவித்த போது, நிறைவேற்ற முடியாத வாக்குறுதி என்று எதிர்க்கட்சிகள் விமர்சித்தார்கள். மிகக்கடுமையான நிதி நெருக்கடி இருந்தாலும் மகளிருக்கு உரிமைத் தொகையை வழங்கியாக வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தேன்.**

### நான் முதல்வன் திட்டம் எனது கனவுத் திட்டம்!

**என்னுடைய கனவுத் திட்டம்தான், ‘நான் முதல்வன்’ திட்டம். படித்த இளைஞர்கள் அனைவர்க்கும் தனித்திறமையை ஏற்படுத்தி, அனைத்துப் பணிகளுக்கும் அவர்களைத் தகுதியானவர்களாக ஆக்கி வருகிறோம். அரசுப் பள்ளியில் படித்து விட்டு உயர்கல்வியை நோக்கி வரும் மாணவியர்க்கு ஆயிரம் ரூபாய் வழங்கும் புதுமைப்பெண் திட்டம் மாணவியர் மத்தியில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. மாணவியர்க்கு மட்டும் தானா, மாணவர்க்கு இல்லையா என்ற கோரிக்கையை ஏற்று, ‘தமிழ்ப்புதல்வன்’ என்ற பெயரில் மாணவர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.**

**மதிய உணவுத் திட்டத்தை இன்னும் விரிவுபடுத்தும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை தொடங்கி வைத்துள்ளோம். 17 லட்சம் பிள்ளைகள் தினமும் காலையில் வயிறார உணவு உண்ட பிறகு கல்வி கற்கிறார்கள். இதனைப் பார்க்கும்போது என் மனம் நிறைகிறது.**

**கேள்வி:-** முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் போல. தேர்தல் அறிக்கை யில் சொல்லப்படாத மேலும் பல திட்டங்களை மீதமுள்ள உங்கள் ஆட்சிக்காலத்தில் எதிர்பார்க்கலாமா?

முதல்வர் மு.க.ஸ்டாலின் : - **தமிழ்நாட்டின் நிதிநிலையை அதலபாதாளத்தில் விட்டுச் சென்றது முந்தைய அ.தி.மு.க. அரசு. தி.மு.க. ஆட்சிக்கு வந்த மூன்றாண்டு காலத்தில் அதனை இயன்ற அளவில் சரிப்படுத்தி, மேம்படுத்தி வருகிறோம். எனினும், தமிழ்நாட்டிற்குரிய வரிப்பங்கீடு, திட்டங்களுக்கான ஒதுக்கீடு உள்ளிட்டவற்றில் ஒன்றிய பா.ஜ.க. அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் பாரபட்சமாக நடந்து கொள்கிறது. அதனால், தொடர்ந்து கடும் நிதி நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அப்படிப்பட்ட சூழலிலும் மக்கள் நலன் காக்கும் காலை உணவுத் திட்டம் போன்ற திட்டங்களையும், ஒவ்வொரு மாவட்டத்திற்கான கட்டமைப்பு வசதிகளையும் உருவாக்கிச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். 2024 மே மாதத்திற்குப் பிறகு, நிதிநிலைமை சீராகும் சூழல் என்ற நம்பிக்கை இருக்கிறது. மக்களுக்கான புதிய திட்டங்கள் தொடரும். இன்னும் பல திட்டங்கள் வர இருக்கின்றன.**

### எந்தத் திட்டத்திற்கும் உரிய நிதியை ஒன்றிய அரசு தருவதில்லை!

**கேள்வி:-** சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகள், வெள்ள நிவாரணப் பணிகளுக்கு நிதி ஒதுக்காதது மாநில அரசுக்கு நிதி நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. ஒன்றிய அரசின் இந்த அணுகுமுறை புதிய திட்டங்களைத் தீட்ட விடாமலும், இருக்கும் திட்டங்களைத் தக்க வைக்க முடியாமலும் மாநில அரசின் திறனைப் பாதிக்கிறதா?

முதல்வர் மு.க.ஸ்டாலின்:- **ஒன்றியத்தில் பா.ஜ.க. ஆட்சி செய்யும் கடந்த பத்தாண்டுகளில் தமிழ்நாடு உள்பட பல மாநிலங்களின் அடிப்படை உரிமைகளும், நிதி ஆதாரங்களும் பறிக்கப்பட்டிருக்கின்றன. முந்தைய அ.தி.மு.க. ஆட்சியாளர்கள் தங்கள் பதவிகளைக் காப்பாற்றிக் கொள்வ தற்காக உதய் மின் திட்டம், நீட் தேர்வு நுழைவு என ஒன்றிய பா.ஜ.க. அரசின் மேலாதிக்கப் போக்கிற்கு அடிபணிந்து விட்டார்கள். இதன் காரணமாக மாநிலத்தின் நிதி நிலைமையும் கடும் பாதிப்புக்குள்ளானது. ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு அதனைச் சீர்ப்படுத்தி வருகிறோம்.**

**மெட்ரோ ரயில் திட்டம், வெள்ளப் பேரிடர் உள்ளிட்ட எதற்கும் ஒன்றிய அரசு உரிய நிதி ஒதுக்குவதில்லை. எனினும், தமிழ்நாட்டு மக்களைப் பாதுகாக்கவும் அவர்களுக்கு உரிய கட்டமைப்புகளை உருவாக்கித் தரவும் உரிய நடவடிக்கைகளை எடுத்து, அதற்கான நிதிஆதாரங்களைத் திரட்டி, திட்டங்களைச் செயல்படுத்துவது தொடரும்.**

**கேள்வி:-** நிதிக் கட்டுப்பாடுகளை விதித்து எதிர்க்கட்சிகள் தங்கள் மாநிலங்களில் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற விடாமல் ஒன்றிய அரசு தடுக்கிறதா? இத்தகைய கட்டுப்பாடுகள், நிதியை விடுவிப்பதில் தாமதம் ஆகியவை பா.ஜ.க.வை எதிர்க்கும் மாநிலங்கள் மீது அழுத்தம் கொடுப்பதற்காகவே செய்யப்படுவதாக நினைக்கிறீர்களா?

முதல்வர் மு.க.ஸ்டாலின்:- **மாநில உரிமைகளைப் பறிக்கும் பா.ஜ.க.வின் முதன்மை இலக்கு, இந்தியாவில் மாநில அரசுகளே இருக்கக்கூடாது என்பதுதான். பா.ஜ.க. ஆட்சி செய்யும் மாநிலங்களை இரட்டை இஞ்சின் அரசு என்று அவர்கள் வர்ணிப்பதன் மூலமே, பா.ஜ.க. ஆட்சியில்லாத மாநில மக்களின் நலன்களைப் புறக்கணிப்பதைப் புரிந்துகொள்ளலாம். அதிலும் தமிழ்நாட்டில் பா.ஜ.க. ஒருபோதும் ஆட்சி அமைக்க முடியாது என்பதால் முற்றிலுமாகப் புறக்கணிக்கும் போக்கு தொடர்கிறது. இதன் மூலமாக, மக்களுக்கு மாநில அரசு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத சூழலை உருவாக்கி, தேர்தல் களத்தில் விமர்சனம் செய்யலாம் என்பது பா.ஜ.க.வின் கணக்கு. ஆனால், அது தப்புக் கணக்காகத்தான் முடியும். பா.ஜ.க.வுக்கு எந்தக் காலத்திலும் தமிழ்நாட்டு மக்கள் வாக்களிக்க மாட்டார்கள். பா.ஜ.க,வுக்கு அளிக்கும் வாக்கு, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு வைக்கும் வேட்டு என்பது தமிழ்நாட்டு மக்களுக்கு நன்கு தெரியும்.**

**கேள்வி:** பிரதமர் மோடியானாலும் பா.ஜ.க ஆனாலும் ஒன்றிய அரசின் எந்த வளர்ச்சித் திட்டத்தை உங்கள் அரசு தடுத்து நிறுத்தியது என விளக்க வேண்டும் என்ற கோரிக்கைக்கு இதுவரை பதில் கூறவில்லை. அதேநேரம், தி.மு.க.வை வாரிசு கட்சி என்றும் ஊழல் கட்சி என்றும் பிரதமர் மீண்டும் விமர்சித்திருக்கிறாரே?

முதல்வர் மு.க.ஸ்டாலின்:- **பொதுவாக, மாற்றுக் கட்சியில் இருப்பவர்கள் நம்மை விமர்சனம் செய்யும்போது ஒரு சில பொய்களை, தவறான தகவல்களை வெளியிடுவது உண்டு. ஆனால், பிரதமர் போன்ற மிக உயர்ந்த பொறுப்பில் இருப்பவர்கள் அப்படிச் செயல்படமாட்டார்கள். பண்டிதர் நேரு முதல் டாக்டர் மன்மோகன் சிங் வரை பிரதமர்கள் அப்படித்தான் இருந்தார்கள். ஆனால், திரு. நரேந்திர மோடியும் அவரது பா.ஜ.க. நிர்வாகிகளும் தவறான தகவல்களைச் சொல்பவர்களாகவும், வதந்திகளை வாட்ஸ்ஆப் வழியாகப் பரப்புகிறவர்களாகவும் இருக்கிறார்கள். இதையே முழு நேரத் தொழிலாகக் கொண்டிருக்கிற பா.ஜ.க. நிர்வாகிகளும் உண்டு. அவை குறித்து, கேள்வி எழுப்பினால் பதில் இருக்காது. இன்னொரு வதந்திக்கோ, விமர்சனத்திற்கோ தாவி விடுவார்கள்.**

### தி.மு.க. மீது திசை திருப்பும் விமர்சனம் செய்கிறார் மோடி!

**ஒன்றிய அரசின் எந்தத் திட்டத்தைத் தமிழ்நாடு அரசு முடக்கியது என்று கேட்டால் அதற்குப் பதில் வராது. காரணம், ஒன்றிய அரசின் பங்களிப்போடு நடைபெறும் பிரதமரின் வீடு கட்டும் திட்டம், ஜல்ஜீவன் திட்டம் உள்ளிட்ட அனைத்திலும் தமிழ்நாடு அரசு தன் பங்களிப்பைக் கூடுதலாகச் செலுத்தி, சிறப்பாக நிறைவேற்றி அதற்காக ஒன்றிய அரசின் சார்பிலேயே விருதுகளையும் பெற்றுள்ளது. இது பிரதமர் தொடங்கி பா.ஜ.க. நிர்வாகிகள் அனைவருக்கும் தெரியும். அதனால்தான் தி.மு.க. மீது வாரிசு அரசியல், ஊழல் முறைகேடு என்று திசைதிருப்பும் விமர்சனங்களை வைப்பது வழக்கமாகிவிட்டது.**

> **7 லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாய் முறைகேடு எனத் தலைமைக் கணக்குத் தணிக்கை அறிக்கையும், தேர்தல் பத்திரங்கள் மூலம் பெற்றுள்ள நிதியும் பா.ஜ.க.வின் உண்மை முகம் என்ன என்பதைக் காட்டியிருக்கிறதே அதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள்? ஊழலை சட்டபூர்வமாகச் செய்வதே பா.ஜ.க.வின் பாணியாகும்.**

**நான் கலைஞரின் மகன்தான். அவருடைய கொள்கை வாரிசுதான். அந்த அடிப்படையில்தான் மக்கள் என் மீது நம்பிக்கை வைத்து முதலமைச்சராகத் தேர்ந்தெடுத்துள்ளார்கள். பா.ஜ.க. வெளியிட்டுள்ள நாடாளுமன்றத் தேர்தல் பட்டியலில் இடம்பெற்றுள்ள வாரிசுகளுக்கு பிரதமரும் அவரது கட்சி நிர்வாகிகளும் என்ன பதில் சொல்லப்போகிறார்கள்?**

**7 லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாய் முறைகேடு எனத் தலைமைக் கணக்குத் தணிக்கை அறிக்கையும், தேர்தல் பத்திரங்கள் மூலம் பெற்றுள்ள நிதியும் பா.ஜ.க.வின் உண்மை முகம் என்ன என்பதைக் காட்டியிருக்கிறதே அதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள்? ஊழலை சட்டபூர்வமாகச் செய்வதே பா.ஜ.க.வின் பாணியாகும்.**

**கேள்வி** : முன்னாள் அமைச்சர்கள் செந்தில் பாலாஜி மற்றும் பொன்முடி ஆகியோருக்கு எதிரான வழக்குகளும், அமைச்சர் இ. பெரியசாமிக்கு எதிராக சென்னை உயர்நீதி மன்றம் அளித்த தீர்ப்பும் தி.மு.க.வின் பிம்பத்தில் பாதிப்பை ஏற்படுத்துமா?

முதல்வர் மு.க.ஸ்டாலின் : - **இவை அரசியல் உள்நோக்கம் கொண்டவை. அமைச்சர் பொன்முடி மீதான தண்டனைக்கு உச்சநீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது. அமலாக்கத்துறை எதிர்க்கட்சிகளைப் பணியவைக்கும் துறையாக பா.ஜ.க. ஆட்சியில் மாறிவிட்டதை தேர்தல் பத்திர ஊழல் வெளிக்கொண்டு வந்துவிட்டதே. இதில் இருந்தே அமைச்சர் செந்தில் பாலாஜி அரசியல்ரீதியாகக் குறி வைக்கப்படுவதைப் புரிந்து கொள்ளலாம். தி.மு.க. அரசுக்கு மக்களிடம் உள்ள நற்பெயருக்கும் செல்வாக்குக்கும் களங்கம் கற்பிக்க வேண்டும் என்ற முயற்சிகள் எப்படிப்பட்டதாக இருந்தாலும் அதனைச் சட்டரீதியாக எதிர்கொள்வோம்.**

### ஜெயலலிதா ஆட்சியை ஊழல் ஆட்சி என்றார் மோடி!

**கேள்வி** : எம்.ஜி.ஆர் மற்றும் ஜெயலலிதா ஆகியோரின் ஆட்சியை மோடி புகழ்ந்து பேசி இருக்கிறார்? இதன் அரசியல் உள்நோக்கம் என்னவாக இருக்கும் என்று கருதுகிறீர்கள்?

முதல்வர் மு.க.ஸ்டாலின்:- **ஜெயலலிதா அம்மையாரின் ஆட்சியை ஊழல் ஆட்சி என்று இதே மோடியும் அமித்ஷாவும் விமர்சித்திருக்கிறார்கள். இப்போது எம்.ஜி.ஆரையும் ஜெயலலிதாவையும் போற்றுகிறார்கள். தமிழ்நாட்டில் தங்களுடைய சாதனை என்று பா.ஜ.க.வால் எதையும் சொல்ல முடியாது. தி.மு.க ஆட்சியின் சாதனைகள் மீதோ, பேறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் அரசியல் கொள்கைகள் மீதோ பா.ஜ.க.வால் ஸ்டிக்கர் ஒட்ட முடியாது. அதனால் எம்.ஜி.ஆரையும் ஜெயலலிதாவையும் பயன்படுத்துகிறார்கள்.**

**கேள்வி** : போதைப் பொருள் வழக்கில் கைதான தி.மு.க.வின் முன்னாள் நிர்வாகி ஜாபர் சாதிக்கை முன்வைத்து பா.ஜ.க.வும் அ.தி.மு.க.வும் தி.மு.க.வை விமர்சித்து வருகின்றனர். முதலமைச்சராக இவ்விவகாரம் குறித்து நீங்கள் பதில் அளிக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி வலியுறுத்தியிருக்கிறார். உங்கள் ஆட்சியில் போதைப்பொருள் புழக்கம் இருப்பதாகக் கூறி மனிதச் சங்கிலிப் போராட்டமும் நடத்தியிருக்கிறார். இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு உங்கள் பதில் என்ன?

முதல்வர் மு.க.ஸ்டாலின்:- **குட்கா ஊழலில் தனது அமைச்சர் மீதும், காவல்துறை தலைவர் மீதும் நேரடியாக குற்றம்சாட்டப்படும் அளவில் ஆட்சி நடத்தியவர்தான் பழனிசாமி. கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களின் புழக்கமும் அவரது ஆட்சியில்தான் அதிகமாகின. அம்மையார் ஜெயலலிதா ஆட்சியிலேயே கஞ்சா - ஹெராயின் வழக்குகள் போடப்பட்டதையும், அவை எப்படிப்பட்டவை என்பதையும் நாடறியும். அதனால், எடப்பாடி பழனிசாமியின் கட்சியினர் நடத்திய மனிதச்சங்கிலி போராட்டம் என்பது தேர்தல் நேர ஸ்டண்ட்.**

### அ.தி.மு.க. - பா.ஜ.க.வும்தான் போதைப் பொருளுக்கு வித்திட்ட கட்சிகள்!

**பா.ஜ.க. ஆட்சி செய்யும் குஜராத்தான் போதை மருந்துகளின் தலைநகரமாக உள்ளது என்பதைப் பல புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. அண்மையில், பழனிசாமியும் அதே குற்றச்சாட்டை சொல்லியிருக்கிறார். ஆக, இந்த இரண்டு கட்சிகளும்தான் போதைப் பொருள்களுக்கு வித்திட்ட கட்சிகள். ஜாபர் சாதிக் விவகாரத்தில் சட்டப்பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தி.மு.க. மீதுஅவதூறு பரப்பினால் சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ள நேரிடும்.**

**கேள்வி:** அண்மைக்காலமாக அடிக்கடி பிரதமர் மோடி தமிழ்நாட்டின் பக்கம் தலைகாட்டுகிறார். கடந்த பத்தாண்டுகளில் அவர் இத்தனை குறுகிய இடைவெளிகளில் தமிழ்நாட்டுக்கு வந்ததே இல்லை. 2014, 2019 தேர்தல் காலத்தில் கூட இதே நிலைதான். தற்போது அவர் அடிக்கடி வரக் காரணம் இங்கு பா.ஜ.க.வுக்கு வாய்ப்புள்ளது என நினைப்பதாலா அல்லது வடக்கில் அவர்கள் வலிமையாக உள்ள மாநிலங்களில் இம்முறை வெற்றி சந்தேகம் என நினைப்பதாலா?

முதல்வர் மு.க.ஸ்டாலின்:- **இந்தியா முழுவதும் மோடி தலைமையிலான அரசின் பத்தாண்டுகால ஆட்சியின் அவலங்களும் அதனால் அதிருப்திகளும் வெளிப்பட்டு வருகின்றன. அது தேர்தல் களத்தில் நிச்சயம் எதிரொலிக்கும். தமிழ்நாடும் தென்மாநிலங்களும் அதைக் கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலேயே எதிரொலித்தன. தமிழ்நாட்டிற்கு என்னென்ன நன்மைகள் செய்தார் என்று மக்களிடம் உண்மையைச் சொல்ல முடியுமா? அவர் வருகிற ஒவ்வொரு முறையும் அவரே தனது ஆட்சியின்அவலங்களைநினைவுபடுத்திவிட்டுச் செல்வார்.**

### தமிழ்நாட்டில் தாமரை மலருமா? கவிழுமா? என்பது தேர்தல் முடிவு காட்டும்!

**கேள்வி:** 2021-இல் இருந்து தமிழ்நாட்டில் பா.ஜ.க. பெரிதும் வளர்ந்துள்ளதாக அவர்கள் கூறிக்கொள்கிறார்கள். தமிழ்நாட்டில் இந்தியா கூட்டணிதான் முழுவெற்றி பெறும் என்று அறிவிக்கும் சில கருத்துக்கணிப்புகளும் பா.ஜ.க தலைமையிலான கூட்டணி 20% வரை வாக்குகளைப் பெறும் என்கின்றன. அப்படியானால் தமிழ்நாட்டில் தாமரை நிலைபெற்றுவிட்டதா?



**கேள்வி:** கூட்டணியில் இருந்து சில கட்சிகள் வெளியேறிய நிலையில் ராகுல் காந்தி பாரத் ஜோடோ நியாய் யாத்திரையைத் தொடர்ந்ததைச்சிலர் விமர்சிக்கிறார்களே?
**முதல்வர் மு.க.ஸ்டாலின் :- ராகுல் காந்தி இந்தியாவின் நம்பிக்கைக்குரிய தலைவராக உள்ளார். அரசியல் மட்டுமல்ல சமூகக் கருத்துகளையும் துணிச்சலாக அவர் வெளிப்படுத்தி வருகிறார். களத்தில் அவருடைய பங்களிப்பு நிறைய தேவைப்படும்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் : - **மாய பிம்பத்தைக் கட்டமைக்க நினைக்கிறார்கள். (தாமரை) மலருமா கவிழுமா என்ற உண்மையைத் தேர்தல் முடிவுகள் காட்டிவிடும்.**

**கேள்வி:** 2019-இல் பா.ஜ.க. வெற்றி பெற்ற இந்தி பேசும் மாநிலங்களில் ‘இந்தியா’ கூட்டணியின் வெற்றி வாய்ப்பு எப்படி உள்ளது? நிதிஷ் குமார், ஜெயந்த் சவுதரி ஆகியோர் வேறு இந்தியா கூட்டணியை விட்டு வெளியேறிவிட்டார்களே?

முதல்வர் மு.க.ஸ்டாலின்: - **2004-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின்போதும் இதேபோல ‘இந்தியா ஒளிர்கிறது’ என்று ஆளும் பா.ஜ.க. தன் பிரச்சாரத்தை முன்னெடுத்தது. கருத்துக் கணிப்புகளும் அதனையொட்டியே இருந்தன. குறிப்பாக, வட மாநிலங்களில் பா.ஜ.க. ஆதரவு அலை என்று தெரிவித்தன. எதிர்க்கட்சிகளிடம் ஒற்றுமையில்லை என விமர்சிக்கப்பட்டது. ஆனால், தேர்தல் முடிவுகள் ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக்கே சாதகமாக அமைந்தன. அடுத்த பத்தாண்டுகள் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சிதான் நடைபெற்றது. 2004 போலத்தான் 2024 தேர்தல் முடிவுகளும் அமையும். வரலாறு திரும்பும்.**

### ‘இந்தியா’ கூட்டணியை தகர்த்துவிடலாம் என்ற பா.ஜ.க.வின் எண்ணம் நிறைவேறாது!

**கேள்வி:** உ.பி., மகாராஷ்டிரா, டெல்லி, குஜராத், மத்திய பிரதேசம், ஹரியானா, கோவா ஆகிய வட மாநிலங்களில் ‘இந்தியா’ கூட்டணி தொகுதிப் பங்கீட்டை நிறைவுசெய்திருப்பது நம்பிக்கை அளிக்கிறது. ஆனால், மத அரசியல் தாக்கம் செலுத்தும் பா.ஜ.க. வலிமையாக உள்ள மாநிலங்களில் அவர்களை எதிர்க்கப் போதுமான நடவடிக்கைகளை ‘இந்தியா’ கூட்டணி மேற்கொண்டுள்ளதா? குறிப்பாக ராமர் கோயில் திறப்புக்குப் பிறகு...

முதல்வர் மு.க.ஸ்டாலின்:- **‘இந்தியா’ கூட்டணியை முற்றிலுமாகத் தகர்த்துவிடலாம் என்ற பா.ஜ.க.வின் எண்ணம் நிறைவேறவில்லை என்பதைத்தான் தங்களின் கேள்வி வெளிப்படுத்துகிறது. மதவாத அரசியல் என்பது பா.ஜ.க.வின் அடிப்படைக் கொள்கை. மக்களின் பக்தியுணர்வை வாக்குகளாக மாற்ற நினைப்பது அதன் தேர்தல் உத்தியாக இருக்கலாம்.**

**மதச்சார்பின்மை - பன்முகத்தன்மை - மாநில உரிமைகளை எந்தளவு பா.ஜ.க. சிதைத்துள்ளது என்பதும் மக்களுக்குத் தெரியும். அதை உரிய வகையில் தேர்தல் களத்தில் எடுத்துரைக்கும் பணியை இந்தியா கூட்டணி உறுதியாகவும் தெளிவாகவும் மேற்கொள்ளும்.**

**கேள்வி:** மேற்கு வங்கத்தில் 42 தொகுதிகளுக்கும் மமதா பேனர்ஜி வேட்பாளர்களை அறிவித்துள்ளார். ஐக்கிய ஜனதா தளம், ராஷ்டிரிய லோக் தளத்துடன் மற்றுமொரு கட்சியை ‘இந்தியா கூட்டணி’ இழந்துவிட்டதா?

முதல்வர் மு.க.ஸ்டாலின்:- **ஒவ்வொரு மாநிலத்திலும் எந்தெந்தக் கட்சிகளுக்கு செல்வாக்கு இருக்கிறதோ அதற்கேற்பத் தொகுதிப் பங்கீடு இருக்க வேண்டும் என்பதும், அந்தந்த மாநிலங்களிலும் பெறுகின்ற முழுமையான வெற்றியின் மூலம் ஒன்றிய அரசில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்பதை இந்தியா கூட்டணியின் முதல் கூட்டத்திலேயே வலியுறுத்தியிருக்கிறேன். ஒரு சில கட்சிகள் தங்களின் மாநில அரசியல் சார்ந்த கண்ணோட்டத்தில் செயல்படுவதைத் தவிர்க்க முடியாது. பா.ஜ.க. மீது மக்களுக்குள்ள கோபத்தை வாக்குகளாக மாற்றும் சக்தி பெற்ற அரசியல் கட்சிகளே தற்போதைய தேர்தல் களத்தில் முதன்மையாக இருப்பதைப் பல மாநிலங்களிலும் காண முடிகிறது.**

### சட்டமன்ற - நாடாளுமன்றத் தேர்தலில் மக்களின் தீர்ப்பு அவ்வப்போது மாறும்!

**கேள்வி:** 5 மாநிலத் தேர்தல் தோல்விகளில் இருந்து (தெலங்கானா வெற்றி தவிர்த்து), இந்தி மாநிலங்களில் பா.ஜ.க.வை சமாளிக்கும் அளவுக்கு காங்கிரஸ் கட்சி மீண்டுவிட்டதா?

முதல்வர் மு.க.ஸ்டாலின்:- **ஒரு சில மாதங்களுக்கிடையே நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலுக்கும் நாடாளுமன்றத் தேர்தலுக்கும் இடையில் மக்களின் தீர்ப்புகள் மாறுபட்டிருப்பதைப் பல தேர்தல்களில் பார்த்திருக்கிறோம். இனியும் பார்க்கலாம்.**

**கேள்வி:** கூட்டணியில் இருந்து சில கட்சிகள் வெளியேறிய நிலையில் ராகுல் காந்தி பாரத் ஜோடோ நியாய் யாத்திரையைத் தொடர்ந்ததைச் சிலர் விமர்சிக்கிறார்களே?

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:- ராகுல் காந்தி இந்தியாவின் நம்பிக்கைக்குரிய தலைவராக உள்ளார். அரசியல் மட்டுமல்ல சமூகக் கருத்துகளையும் துணிச்சலாக அவர் வெளிப்படுத்தி வருகிறார். களத்தில் அவருடைய பங்களிப்பு நிறைய தேவைப்படும்.**

### ‘இந்தியா’ கூட்டணி தனது பணியைத் தொடங்கி விட்டது!

**கேள்வி:** தேர்தலுக்கு மிக நெருக்கத்தில்தான் இந்தியா கூட்டணி வேலையைத் தொடங்கியிருக்கிறதா? வாக்குகளைக் கவரப் போதிய அவகாசம் இருக்கிறதா?

முதல்வர் மு.க.ஸ்டாலின்: - **இந்தியா கூட்டணி என்பது தன்னுடைய வேலைத் திட்டத்தைச் செயல்படுத்தத் தொடங்கிவிட்டது. அவற்றை ஒருங்கிணைக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. தேர்தல் பரப்புரைகளின் போது உங்களின் கேள்விக்கான விடையை நேரில் காண்பீர்கள்.**

**கேள்வி:** வி.சி.க.வுடன் நீங்கள் தொகுதிப் பங்கீட்டை முடித்த மறுநாள் அதன் துணைப் பொதுச்செயலாளர் மீது ரெய்டு நடக்கிறது. சிவசேனா, ஆர்.ஜே.டி, சமாஜ்வாதி கட்சித் தலைவர்களுக்கும் இது நடந்தது. திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் சொத்துகள் அமலாக்கத்துறையால் முடக்கப்பட்டன. இவை ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகள் என்கிறார் பிரதமர். இது வாக்காளர்களிடையே எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும்? இது ஒரு தேர்தல் பிரச்சினையாக மாறுமா?

முதல்வர் மு.க.ஸ்டாலின்: - **பா.ஜ.க. ஆட்சியில் இல்லாத மாநிலங்கள் மற்றும் பா.ஜ.க.வை எதிர்க்கும் கட்சிகள் இவற்றைக் குறிவைத்தே அமலாக்கத்துறை, சி.பி.ஐ, வருமானவரித்துறை ரெய்டுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை எல்லாரும் அறிவார்கள். குற்றம் சாட்டப்பட்டவர்கள் பா.ஜ.க.வுக்குத் தாவி விட்டால், அவர்கள் மீதான ஊழல் கறையைச் சலவை செய்து தூய்மைப்படுத்தும் வாஷிங் மெஷினாக பா.ஜ.க. செயல்பட்டு, அவர்களுக்குக் கட்சியிலும் ஆட்சியிலும் பதவியும் வழங்கி வருகிறது.**

### அரசியல் கட்சிகளை மிரட்ட அமலாக்கத்துறையைப் பயன்படுத்தும் மோடி!

**மற்ற கட்சிகளையெல்லாம் ஊழல்வாதிகள் என்றும், தாங்கள் மட்டுமே யோக்கியசிகாமணிகள் என்றும் சொல்லி வந்த பா.ஜ.க.வின் முகத்திரை தேர்தல் பத்திரங்கள் மூலம் அம்பலமாகியிருக்கிறது. அமலாக்கத் துறையால் நடவடிக்கைக்குள்ளான நிறுவனங்கள் பல அடுத்த சில நாட்களில் பா.ஜ.க.வுக்கு பெருமளவில் நிதியளித்திருப்பது வெளிப்பட்டுள்ளது. இதிலிருந்தே அரசியல் கட்சிகளையும் நிறுவனங்களையும் மிரட்டுவ தற்காகவே அமலாக்கத்துறை என்கிற அமைப்பை மோடி அரசு பயன்படுத்தியிருப்பதும், அதன் மூலமாக நூற்றுக்கணக்கான கோடிகளை நிதியாகப் பெற்றிருப்பதும் உறுதியாகிவிட்டது. உண்மையான ஊழல் கட்சி பா.ஜ.க.தான் என்பதை மக்கள் நன்றாகவே புரிந்து கொண்டார்கள்.**

### தோழமைக் கட்சிகளுக்கு மதிப்பளித்து தொகுதிப் பங்கீடு!

**கேள்வி:** கூட்டணிக் கட்சிகளுடன் தமிழ்நாட்டில் வெற்றிகரமாகத் தொகுதிப் பங்கீட்டை முடித்துவிட்டீர்கள். 2019-ஐ விட இம்முறை குறைந்த தொகுதிகளில்தான் தி.மு.க போட்டியிடுகிறது. கூட்டணிக் கட்சியினரை அனுசரித்துப் போக வேண்டுமென தி.மு.க. சமரசம் செய்துகொண்டதா?

முதல்வர் மு.க.ஸ்டாலின்:- **இது தேர்தல் கூட்டணி அல்ல. கொள்கைக் கூட்டணி என்பதை 2019, 2021 தேர்தல்களில் நிரூபித்தோம். அதே கூட்டணி இப்போதும்**

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்